




# ஆனந்த பாஸ்கர்

PRGI No: TNMUL/25/A1387 உதயத்தில் உங்களுடன் காலை நாளிதழ்

ANANDA BHASKAR www.anandabhaskar.com








சென்னை மலர்: 01 இதழ்: 146 21.11.2025 வெள்ளிக்கிழமை

Chennai Volume: 01 Issue: 146 Friday pages 4 Rs.5/-


## இன்றைய நாள்

வெள்ளிக்கிழமை
(21-11-2025)
விசுவாவசு ஆண்டு, கார்த்திகை-5

பிறை: வளர்பிறை

திதி
பிரதமை பிற்பகல் 2.37 வரை
பிறகு துவிதியை

நட்சத்திரம்:
அனுஷம் பிற்பகல் 2.26 வரை
பிறகு கேட்டை

யோகம்
சித்த/மரணயோகம்

ராகுகாலம்
காலை 10.30-12.00 மணி

எமகண்டம்
பிற்பகல் 3.00-4.30 மணி.

சூலம் -மேற்கு

நல்ல நேரம் :
காலை 6-7 மணி.
மாலை 5-6 மணி.

| | |
|---|---|
| மேஷம் | வெற்றி |
| ரிஷபம் | சிறப்பு |
| மிதுனம் | வரவு |
| கடகம் | உயர்வு |
| சிம்மம் | ஆதரவு |
| கன்னி | நன்மை |
| துலாம் | தெளிவு |
| விருச்சிகம் | ஜெயம் |
| தனுசு | பரிசு |
| மகரம் | புகழ் |
| கும்பம் | சாந்தம் |
| மீனம் | நன்மை |

## நவ.27ல் மற்றொரு காற்றழுத்தத் தாழ்வு மண்டலம்!

**சென்னை,நவ.21:**

வங்கக்கடலில் நவம்பர் 27ல் மற்றொரு காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவாக வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், நவ.27ல் உருவாகும் காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் மேலும் வலுவடைந்து ஆந்திரத்தை நோக்கி நகர வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அதேசமயம், வருகிற நவ. 22-ஆம் தேதி தென்கிழக்கு வங்கக் கடலில் காற்றழுத்த தாழ்வுப் பகுதி (புயல் சின்னம்) உருவாக வாய்ப்புள்ளது. இது, மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து, நவ. 24-இல் தெற்கு வங்கக் கடலின் மத்திய பகுதிகளில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, நாளை முதல் 6 நாள்களுக்கு கனமழை தொடரும் என வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது.

# நிதீஷ் குமாருக்கு 10 முறை முதல்வர் பதவியேற்றார்

**பாட்னா,நவ.21:**

நிதிஷ் குமார் பதவியேற்ற உடனேயே, பாஜக தலைவர்கள் சாம்ராட் சவுத்ரி மற்றும் விஜய் குமார் சின்ஹா ஆகியோர் கேபினட் அமைச்சர்களாக பதவியேற்றனர். ஜேடியு தலைவர்கள் விஜய் குமார் சவுத்ரி, பிஜேந்திர பிரசாத் யாதவ், ஷ்ரவன் குமார், பாஜக தலைவர்கள் மங்கள் பாண்டே, திலீப் குமார் ஜெய்ஸ்வால் மற்றும் நிதின் நபின் உள்ளிட்ட பலரும் கேபினட் அமைச்சர்களாக பதவியேற்றனர்.

முன்னதாக, நேற்று தேசிய ஜனநாயகக் கூட்டணியின் சட்டப்பேரவை குழு தலைவராக நிதிஷ் குமார் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார். முன்னதாக, பாட்னாவில் உள்ள நிதிஷ்குமாரின் இல்லத்தில் நடைபெற்ற ஜேடியு சட்டப்பேரவை உறுப்பினர்களின் கூட்டத்தில் அவர் ஜேடியு சட்டப்பேரவை கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### 26 கேபினட் அமைச்சர்கள் பதவியேற்பு:

பீகாரில் மொத்தம் 26 பேர் அமைச்சர்களாக பதவியேற்றனர். இதில் பாஜகவிலிருந்து 14 பேர், ஜே.டி.யுவிலிருந்து 8 பேர், எல்.ஜே.பியிலிருந்து 2 பேர், எச்.ஏ.எம் மற்றும் ஆர்.எல்.எம்லிருந்து தலா ஒருவர் அமைச்சர்களாக பொறுப்பேற்றனர். நிதிஷ் குமாரின் அமைச்சரவையில் உள்ள 26 பேரில் ஒரே ஒரு முஸ்லிம் மட்டும் இடம்பெற்றுள்ளார்.

மஹுவா சட்டமன்றத் தொகுதியில் லாலு பிரசாத்தின் மகன் தேஜ் பிரதாப் யாதவை தோற்கடித்த எல்.ஜே.பி யின் சஞ்சய் குமார் சிங் உட்பட 9 புதிய முகங்கள் அமைச்சரவையில் இடம்பெற்றுள்ளனர். பீகார் அமைச்சரவையில் மூன்று பெண்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.




கயா டவுனில் இருந்து 9 முறை பாஜக எம்.எல்.ஏ.வான பிரேம் குமார் சபாநாயகராக பொறுப்பேற்கிறார்.

பிகார் மாநிலத்தில் மிகச் சிக்கலான அரசியலமைப்பு மற்றும் சமுதாயப் போக்குகளைத் தாண்டி, நிதீஷ் குமார் முதல்வர் பதவியில் நீடித்து வருவது, அவ்வளவு ஒன்றும் எளிதல்ல. அவரது அரசியல் பயணம், கூட்டணிகளை உருவாக்குதல், மாறிவரும் அரசியல் மாறுபாடுகளுக்கு ஏற்ப தகவமைப்புத் திறனை வளர்த்தல், பிகார் மாநிலத்தின் வேகமான வளர்ச்சி போன்றவை, நவீன கால அரசியல் வரலாற்றிலும் அவரது ஆதிக்கம் கோலோச்சுவதை உறுதி செய்திருக்கிறது.

பிகாரின் வரலாறையும், நிதீஷ் குமாரின் வரலாறையும் பிரிக்க முடியாத அளவுக்கு கால் நூற்றாண்டுகளாக அந்த மண்ணை ஆண்டு வருகிறார். அவரது ஆட்சிக் காலத்தில் ஒவ்வொரு முறையும் அவர் பிகார் மாநில முன்னேற்றத்துக்காக பல நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

கடந்த 2000ஆவது ஆண்டு நிதீஷ் குமார் மார்ச் 3ஆம் தேதி முதல்வராக பதவியேற்றார், ஆனால் 7 நாள்களில் அவர் பதவியை இழந்தார்.

### கூட்டணி மாறுவதில் வல்லவர்

அவரது ஒட்டுமொத்த அரசியல் வாழ்விலும் அவர் பாஜகவுடனும் மகாகத்பந்தன் கூட்டணியிலும் மாறி மாறி இடம்பெற்றுள்ளார். யாருடன் இணைந்தால் ஆட்சியில் இருக்க முடியுமோ அவர்களுடன் நிதீஷ் இருந்தார் என்று சொல்வதா? நிதீஷ் இருந்தால் அந்த கூட்டணி ஆட்சியில் இருக்கும் என்று சொல்வதா? என்ற விவாதத்தையே அவர் ஏற்படுத்தியிருக்கிறார்.

1. முதல் முறை பாஜக - சமதா கட்சி கூட்டணி
2. 2005, நவம்பர் 24 - 2010 நவ. 24 : தேசிய ஜனநாயகக் கூட்டணியுடன் ஆட்சி! முதல் முறையாக ஐந்து ஆண்டுகள் ஆட்சியை பூர்த்தி செய்தார்.
3. 2010, நவ.26 - 2014, மே 17 : தேசிய ஜனநாயகக் கூட்டணி. 2014 மக்களவைத் தேர்தலைத் தொடர்ந்து நிதீஷ் குமார் பதவியை ராஜிநாமா செய்தார்.
4. 2015, பிப்ரவரி 22 - 2015, நவ. 19 : மகாகத்பந்தன் கூட்டணியில் இணைந்தார். காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளின் ஆதரவோடு நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி பெற்றார்.
5. 2015, நவ. 20 - 2017, ஜூலை 27 : மகாகத்பந்தன் கூட்டணியில் ராஷ்ட்ரிய ஜனதா தளம் மற்றும் காங்கிரஸ் உடன் ஆட்சியில் இருந்தார்.
6. 2017, ஜூலை 27 - 2020 நவம்பர் : மகாகத்பந்தன் கூட்டணியுடனான உறவை முறித்துக் கொண்டு மீண்டும் பாஜகவுடன் இணைந்தார்.
7. 2020 நவம்பர் - 2022 ஆகஸ்ட் : தேசிய ஜனநாயகக் கூட்டணியுடன் இணைந்து பேரவைத் தேர்தல் வெற்றி பெற்று முதல்வரானார்.
8. 2022, ஆகஸ்ட் - 2024, ஜனவரி : பாஜக கூட்டணியிலிருந்து வெளியேறி மகாகத்பந்தன் உடன் இணைந்தார்.
9. 2024, ஜனவரி - 2025 நவம்பர் : மீண்டும் கட்சித் தாவுகிறார். தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இணைந்து 9வது முறையாக பதவியேற்கிறார்.
10. 2025 நவம்பர் 20- தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இணைந்து பேரவைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று இன்று முதல்வராகியிருக்கிறார்,

கடந்த பத்து முறை, முதல்வராக பதவியேற்க அவர் தேசிய ஜனநாயகக் கூட்டணியிலிருந்து மகாகத்பந்தன் கூட்டணியும், மீண்டும் மகாகத்பந்தன் கூட்டணியிலிருந்து தேசிய ஜனநாயக கூட்டணிக்கும் மாறியிருக்கிறார். ஒவ்வொரு முறையும் இவரை கூட்டணிக் கட்சிகள் முதல்வராக்கி அழகுபார்த்திருக்கிறார்.

### பிகாருக்கு என்ன செய்தார்?

இரண்டாவது மற்றும் மூன்றாவது ஆட்சிக்காலத்தில் நல்லாட்சியை வழங்கினார். மாநிலத்தின் உள்கட்டமைப்புகளில் கவனம் செலுத்தினார். சமூக நலத்திட்டங்களை உருவாக்கி, சட்ட ஆட்சியை நிலைநாட்டினார். இதுவே இத்தனை காலம் இவரை வழிநடத்தி வந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது.

இந்திய அரசியலில் நிதிஷ் குமார் போல வளைந்துகொடுத்துச் சென்ற தலைவர்கள் மிகக் குறைவு. கூட்டணி மாறியிருக்கிறார் என்றால் இந்த மாற்றங்கள் ஏதோ தற்செயலானவை அல்ல, அவை அரசியல் சூழல், அவரது கட்சியின் பலம், கூட்டணி, அடுத்து ஆட்சியைப் பிடிக்கும் வாய்ப்புகள் ஆகியவற்றின் அடிப்படையில் கணக்கிடப்பட்டு மிகச் சிறப்பாக செய்யப்பட்ட நகர்வுகள் என்கின்றன தரவுகள்.

அவர் நடத்தி வந்த கூட்டணி ஆட்சிகள் அனைத்துமே, அவரது சிறந்த நிர்வாகத்தை வெளிப்படுத்தியிருக்கிறது. பாஜக அல்லது ராஷ்ட்ரிய ஜனதா தளம் அல்லது காங்கிரஸுடன் இருந்தாலும், நிதிஷ் பெரும்பாலும் ஒரே மாதிரியான கூட்டாளியாக இருந்ததோடு, எப்போதும் தன்னை மையப்படுத்தியே கூட்டணி அமைவது போல பார்த்துக் கொண்டார்.


எந்த ஒரு கட்சியும் முழுமையாக ஆதிக்கம் செலுத்தாத பிகார் மாநில சிக்கலான அரசியலமைப்பை தனக்கு சாதகமாக்கிக் கொண்ட நிதீஷ் குமார், பிகார் முதல்வராக பத்து முறை பதவியேற்றிருக்கிறார் என்பது வெறும் பதவியைத் தக்கவைத்துக் கொள்வது மட்டுமல்ல, அதையும் தாண்டி, அவரது அரசியல் அனுபவம், ஆட்சித் திறனுக்கான சாட்சியாக அமைந்துள்ளது. பாட்னா: பிரதமர் நரேந்திர மோடி, அமித் ஷா மற்றும் என்டிஏ கூட்டணி தலைவர்கள் முன்னிலையில், ஐக்கிய ஜனதா தளம் தலைவர் நிதிஷ் குமார் இன்று (நவம்பர் 20) பிஹார் முதல்வராக 10வது முறையாக பதவியேற்றார். அவருக்கு ஆளுநர் ஆரிஃப் முகமது கான் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

## தமிழ்மொழி மீதான தாக்குதலுக்கு தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும்

**சென்னை,நவ.21:**

கோவை - மதுரை மெட்ரோ ரெயில் திட்டங்களை முடக்கி தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்குக்கூட்டணிக் கட்சிகளின் சார்பில் கோவையில் இன்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இந்நிலையில் கோவையில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி நடத்திய ஆர்ப்பாட்டத்தின் புகைப்படங்களை பகிர்ந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.



அதில், தமிழ்நாட்டின் வளர்ச்சியைத் தடுக்கும் தீய எண்ணமே உருவான ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிராகக் கோவையில் திரண்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி!

* கோவை, மதுரை மாநகரங்களுக்கான மெட்ரோ திட்டம் நிராகரிப்பு,

* #SIR மூலம் வாக்குரிமை பறிப்பு, #DELIMITATION மூலம் தமிழ்நாட்டின் தொகுதி குறைப்பு,

* மக்களாட்சி மாண்பை மதிக்காத ஆளுநரின் அடாவடி,

* நிதி ஒதுக்கீட்டு ஓரவஞ்சனை, உழவர்களுக்கு உதவி மறுப்பு,

* தமிழ்மொழி மீதான தாக்குதல் & இந்தித் திணிப்பு

* என அனைத்துக்கும் எதிராகத் #தமிழ்நாடுபோராடும்_தமிழ்நாடுவெல்லும்! இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## பணமோசடி வழக்கு: பிரியங்கா கணவர் ராபர்ட் மீது குற்றப்பத்திரிகை

**புதுடில்லி,நவ.21:**

ஆயுத தரகர் சஞ்சய் பண்டாரி தொடர்புடைய வழக்கில் பணமோசடியில் ஈடுபட்டதாக காங்கிரஸ் எம்பி பிரியங்காவின் கணவர் ராபர்ட் வாத்ரா மீது அமலாக்கத்துறை அதிகாரிகள் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளனர்.ஏற்கனவே, ராஜஸ்தான் மற்றும் ஹரியானாவில் நடந்த நில பேரத்தில் நடந்த நிதிமுறைகேடுகள் குறித்த விவகாரத்தில் அமலாக்கத்துறையின் விசாரணை வளையத்தில் ராபர்ட் வாத்ரா உள்ளார். ஹரியானாவில் நடந்த நில பேரம் தொடர்பான வழக்கில் கடந்த ஏப்ரல் மாதம் அவரிடம் அமலாக்கத்துறை அதிகாரிகள் விசாரணை நடத்தியிருந்தனர்.

மேலும் கடந்த 2009 ம் ஆண்டு ஆயுதத் தரகர் சஞ்சய் பண்டாரி, ராபர்ட் வாத்ராவின் அறிவுறுத்தலின் பேரில், அவர் வழங்கிய நிதியில் லண்டனில் ஒரு சொகுசு பங்களாவை புனரமைத்தார் என அமலாக்கத்துறை குற்றம்சாட்டியது.

ஆனால், இந்தக் குற்றச்சாட்டை ராபர்ட் வாத்ரா மறுத்து இருந்தார். இந்த வழக்கில் கடந்த 2023 ம் ஆண்டு சஞ்சய் பந்தாரி மீது அமலாக்கத்துறை அதிகாரிகள், நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தனர்.



கடந்த ஜூலை மாதம் இந்த வழக்கு தொடர்பாக ராபர்ட் வாத்ராவிடம் அமலாக்கத்துறை அதிகாரிகள் வாக்குமூலம் பதிவு செய்திருந்தனர்.இந்நிலையில், இந்த வழக்கில் நடந்த பண மோசடி தொடர்பாக ராபர்ட் வாத்ரா மீது, டில்லி ரோஸ் அவென்யூ நீதிமன்றத்தில் அமலாக்கத்துறை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது. இந்த விவகாரத்தில் ராபர்ட் வாத்ரா 9வது குற்றவாளியாக சேர்க்கப்பட்டுள்ளார். இந்த குற்றப்பத்திரிகை மீது வரும் 9ம் தேதி பரிசீலனை செய்யப்படுகிறது.






## பெண்கள் வாழமுடியாத மாநிலமாக மாறிய தமிழகம்

**சென்னை,நவ.21:**

ராமநாதபுரத்தில் 12ம் வகுப்பு மாணவி கத்தியால் குத்தி படுகொலை செய்யப்பட்டிருப்பது பெரும் அதிர்ச்சியையும், மிகுந்த மனவேதனையையும் அளிக்கிறது. திமுக ஆட்சியில் பெண்கள் மீதான பாலியல் சீண்டல், வன்கொடுமை, படுகொலை, நகை பறிப்பு உள்ளிட்ட கொடுங்குற்றங்கள் நடைபெறாத நாளே இல்லை என்ற அளவிற்குச் சட்டம் ஒழுங்கு முற்று முழுதாகச் சீரழிந்துள்ளது.

நாட்டையே உலுக்கிய அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை, கும்மிடிப்பூண்டி பள்ளிச்சிறுமி பாலியல் வன்கொடுமை, கோவை கல்லூரி மாணவி பாலியல் வன்கொடுமை என்று அடுத்தடுத்து தொடரும் பெண்கள் மீதான கொடுமைகளின் உச்சமாகத் தற்போது பட்டப்பகலில் 12ம் வகுப்பு பள்ளி மாணவி படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

திமுக ஆட்சியில் தொடர்ச்சியாக பெண்கள் மீது கொடுந்தாக்குதல் தொடுக்கும் துணிவு சமூக விரோதிகளுக்கு எங்கிருந்து வருகின்றது? பெண்கள் மீதான வன்முறைகளுக்கு எதிரான சட்டங்கள் கடுமையாக்கப்பட வேண்டும் என்று பலமுறை வலியுறுத்தியும் திமுக அரசு அதனை அலட்சியம் செய்வது ஏன்? ஒவ்வொரு முறையும் குற்றம் நடந்த பிறகு கடுமையான நடவடிக்கை எடுப்பது போலத் திமுக அரசு நடத்தும் நாடகம் இன்னும் எத்தனை நாட்களுக்குத் தொடரப்போகிறது?

பெண்கள் மீதான வன்முறைகள் நடைபெறாமல் தடுக்கவும், குறைக்கவும் திமுக அரசு என்ன முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்துள்ளது?



அனைத்துச் சமூகக் குற்றங்களுக்கும் அடிப்படை காரணமான மதுக்கடைகளை மூடுவதற்குத் திமுக அரசிற்கு இன்னும் என்ன தயக்கம்? பெண்கள் மீதான வன்முறையில் இந்தியாவிலே தமிழகத்தை முதன்மை மாநிலமாக மாற்றியதற்குப் பெயர்தான் திராவிட மாடலா?

திமுக ஆட்சியில் கட்டுக்கடங்காத போதைப்பொருள் புழக்கத்தால் சாமானிய மனிதரையும் சமூக விரோதியாக உருமாற்றியதுதான் திமுக அரசின் நான்கு ஆண்டுகாலச் சாதனையாகும். திமுக ஆட்சி தொடரும் கடைசி நாள்வரை பெண்கள் மீதான இத்தகைய கொடும் வன்முறைகள் தொடருமோ? என்று பொதுமக்கள் பெரும் அச்சமடைந்துள்ளனர். 12ம் வகுப்பு மாணவி கொலை வழக்கில் அதிவிரைவாகக் கடும் தண்டனையைப் பெற்றுத்தர தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இனியும், இதுபோன்ற பெண்களுக்கு எதிரான கொடும் வன்முறைகள் தொடராமல் தடுக்க உடனடியாக முழுமையான மதுவிலக்கை நடைமுறைப்படுத்த வேண்டும். போதைப்பொருள் புழக்கத்தை முற்றிலுமாகக் கட்டுப்படுத்திச் சட்டம் ஒழுங்கை சீர்படுத்தம். பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கான சட்டத்தைக் கடுமையாக்க வேண்டும் என வலியுறுத்துகிறேன். இவ்வாறு சீமான் கூறியுள்ளார்.




# வேலூர் ஸ்ரீபுரம் பொற்கோயிலில் மங்கள நாராயணிக்கு சிறப்பு பூஜை!




**வேலூர் ,நவ.21:** வேலூர் மாவட்டம், அரியூரில் உள்ள திருமலைக்கோடி ஸ்ரீபுரம் பொற்கோயிலில் உலக நன்மை மற்றும் இயற்கை வளங்களை பாதுகாக்க வேண்டி மங்கள நாராயணிக்கு சிறப்பு பூஜை நேற்று முன் தினம் இரவு நடைபெற்றது.

ஸ்ரீ சக்தி அம்மா தலைமையில் நடந்த இந்த பூஜையில் மங்கள நாராயணி அம்மனுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடத்தப்பட்டன. இதில் பல்வேறு புனித பொருட்களை பயன்படுத்தியும், வாசனை திரவியங்களை கொண்டும் ஸ்ரீசக்தி அம்மா பூஜைகளை முன்னின்று நடத்தினார்.

இந்நிகழ்வில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு ஸ்ரீமங்கல நாராயணியை பக்தி பொங்க வழிபட்டனர். பூஜையில் கலந்து கொண்ட பக்தர்கள் அனைவருக்கும் பிரசாதங்கள் விநியோகம் செய்யப்பட்டது குறிப்பிடத் தக்கது.

# மானாமதுரை அருகே கட்டிக்குளம் சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிக்கு அமாவாசை சிறப்பு பூஜை



**மானாமதுரை,நவ.21:** சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே கட்டிக் குளம் கருப்பனேந்தல் மடத்தில் மகா சித்தர் சூட்டுக்கோல் மாயாண்டி சுவா மிகள் முதல் ஜீவ ஒடுக்கம் கோவில்உள்ளது. மாயண்டி சுவாமி தன் சீடர்க்கு 48 நாட் கள் தவமிருந்து தன் உள்ளங் கையில் காசி ராமேஸ்வரம் கோவில்களை தரிசிக்க வைத்த இடமாகும். இங்கு உள்ள தவசாலையில் நேற்று அமாவாசை முன்னிட்டு சிறப்பு பூஜை வழிபாடு அன்னதானம் நடைபெற்றது. முன்னதாக சூட்டுக் கோல் மாயாண்டி சுவாமிக்கு பதினாறு வகையான மூலிகை கள் அபிஷேகம் நடைபெற்றது. அதை தொடர்ந்து சூட்டுக் கோல் மாயாண்டி சுவாமி ஐம்பொன் சிலைக்கு மலர் அலங்காரம் செய்யப்பட்டு தீபாராதனை நடைபெற்றது. கட்டிக் குளம் மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் இருந்து ஏராளமான பக்தர் கள் கலந்து கொண்டு வழி பாடு செய்தனர்.

# திராவிட வெற்றிக் கழகம் - புதிய கட்சி தொடங்கினார் மல்லை சத்யா




**சென்னை, நவ.21:** ம.தி.மு.க. துணை பொதுச்செயலர் பதவியில் இருந்தும் அக்கட்சியில் இருந்தும் மல்லை சத்யா நீக்கப்பட்டார்.

இதையடுத்து புதிய கட்சியின் பெயர் நவ.20-ந்தேதி அறிவிக்கப்படும் என்று அவர் தெரிவித்து இருந்தார்.

இந்நிலையில் சென்னை அடையாறில் நடந்த கூட்டத்தில் மல்லை சத்யா தனது புதிய கட்சியின் பெயரை அறிவித்தார். அவர் 'திராவிட வெற்றிக் கழகம்' என்ற கட்சியை தொடங்கினார்.

ம.தி.மு.க.வில் இருந்து நீக்கப்பட்ட பலரும் மல்லை சத்யாவின் 'திராவிட வெற்றிக் கழகம்' கட்சியுடன் இணைந்துள்ளனர்.

தி.மு.க.வில் அங்கம் வகித்த வைகோ, கலைஞர் கருணாநிதியுடன் ஏற்பட்ட அதிருப்தி காரணமாக அக்கட்சியில் இருந்து வெளியேறி ம.தி.மு.க. என்ற புதிய கட்சியை தொடங்கினார். இதே போன்று ம.தி.மு.க.வில் அங்கம் வகித்த மல்லை சத்யா துரை வைகோவுடனான மோதல் போக்கு காரணமாக அக்கட்சியில் இருந்து விலகினார். இந்நிலையில் அவர் திராவிட வெற்றிக் கழகம் என்ற புதிய கட்சியை தொடங்கி உள்ளார்.

# திருவண்ணாமலை கார்த்திகை தீபத் திருவிழாவுக்கு சிறப்பு பஸ்கள் - ரெயில்கள் இயக்கம்



**திருவண்ணாமலை, நவ.21:** திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவிலில் கார்த்திகை தீபத் திருவிழா முன்னேற்பாடுகள் பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது.

அமைச்சர்கள் எ.வ.வேலு, சேகர்பாபு ஆகியோர் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடந்தது. இதில் அவர்கள் கூறியதாவது:-

தீப திருவிழாவையொட்டி திருவண்ணாமலைக்கு மாநிலத்தில் அனைத்து பகுதிகளிலும் இருந்தும் மொத்தம் 4,764 பஸ்கள் இயக்கப்பட உள்ளன.

தீபத் திருவிழா பாதுகாப்பிற்காக சுமார் 15 ஆயிரம் போலீசார் மற்றும் 430 தீயணைப்பு வீரர்கள், 24 தீயணைப்பு வாகனங்கள் ஈடுபடுத்தப்பட உள்ளன. கிரிவல பாதை மற்றும் மாட வீதி உள்ளிட்ட பல இடங்களில் 24 கண்காணிப்பு கோபுரங்கள், 61 போலீஸ் உதவி மையங்கள், 454 அறிவிப்பு மையங்கள், 1060 கண்காணிப்பு கேமராக்கள் அமைக்கப்படுகிறது.

பக்தர்களின் தேவையை பூர்த்தி செய்வதற்காக பஸ்களின் எண்ணிக்கை 20 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. பக்தர்களின் கூட்டத்தை பொருத்து 40 பஸ்கள் தயாராக வைக்கப்பட்டுள்ளன. பக்தர்களுக்காக 24 தற்காலிக பஸ் நிலையங்களும், 130 கார் பார்க்கிங் இடங்கள் அமைக்கப்படும். பக்தர்களின் வசதிக்காக போலீஸ் உதவி மையங்கள், குடிநீர், மின்விளக்கு வசதிகள் மற்றும் தகவல் பலகைகள் ஏற்பாடு செய்யப்படும்.

கார்த்திகை தீபத்தன்று மழை பெய்தால் தேங்கி நீங்கும் தண்ணீரை வெளியேற்றுவதற்கான முன்னெச்சரிக்கை ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தற்காலிக பஸ் நிலையங்களில் இருந்து கிரிவல பாதைக்கு தனியார் கல்லூரிகளின் 220 பஸ்கள் இலவசமாக இயக்கப்படும். அருகில் உள்ள மாவட்டங்களில் இருந்து ரூ.10 சலுகை விலையில் 90 மினி பஸ்கள் இயக்கப்படும். கார் நிறுத்தும் இடங்களில் இருந்தும் பஸ்கள் இயக்கப்படும்.

திருவண்ணாமலைக்கு ஏற்கனவே 16 ரெயில்கள் இயக்கப்படுகின்றன. கார்த்திகை தீபத்தன்று மேலும் 16 சிறப்பு ரெயில்கள் இயக்கப்படும். 25 கிலோமீட்டர் தூரத்திற்கான ஆட்டோ கட்டணம் ரூ.40 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

25 கிலோ மீட்டருக்கு மேல் இருந்தால் ரூ.60 வசூலிக்கப்படலாம். அதிகப்படியான கட்டண வசூலிக்கும் ஆட்டோக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆட்டோக்களை கண்காணிக்க போக்குவரத்து ஊழியர்கள் நியமிக்கப்படுவார்கள். ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு போதுமான பாதுகாப்பு வழங்கப்படும். போக்குவரத்தை ஒழுங்குபடுத்த மொத்தம் 40 ரோந்து வாகனங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

மாட வீதி மற்றும் கிரிவலப் பாதையில் 90 மருத்துவ குழுக்கள் அமைக்கப்படும். கோவிலுக்குள் 7 மருத்துவ குழுக்கள் 45 ஆம்புலன்ஸ்கள் மற்றும் 5 பைக் ஆம்புலன்ஸ்கள் நிறுத்தப்படும். மாநில நெடுஞ்சாலைகளில் உள்ள 2 விருந்தினர் இல்லங்கள் மக்களுக்கு அவசர சிகிச்சை அளிக்க பயன்படுத்தப்படும். மேலும் தேவையான உபகரணங்களுடன் கூடிய மருத்துவர் குழுவும் இருக்கும். இந்த ஆண்டு 40 லட்சம் பக்தர்கள் வருவார்கள் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

# கோயம்பேடு மார்க்கெட் வளாகத்தில் குளிர்சாதன சேமிப்பு கிடங்குகள்




## மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்

**சென்னை, நவ.21:** முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் இயங்கும் சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் சார்பில் ஆவடி, அன்னனூர், கோணாம்பேடு அரசு உயர்நிலைப் பள்ளிகளில் கூடுதல் பள்ளிக் கட்டிடங்கள், கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தில் குளிர்சாதன சேமிப்பு கிடங்குகள், புழல் மேட்டுபாளையத்தில் மேம்படுத்தப்பட்ட கால்பந்து மைதானம் மற்றும் சேத்துப்பட்டில் மேம்படுத்தப்பட்ட சிறிய கால்பந்து மைதானம் என 20.89 கோடி ரூபாய் செலவில் 4 முடிவுற்றப் பணிகளை திறந்து வைத்தார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இன்று தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சித்துறை சார்பில் தமிழ் இலக்கியத்திற்கு வளம் சேர்க்கும் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் வகையில் 2024ம் ஆண்டிற்கான இலக்கிய மாமணி விருதுகளை சென்னை, மாவட்டத்தைச் சேர்ந்த முனைவர் தெ. ஞானசுந்தரம் (மரபுத் தமிழ்), திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த முனைவர் இரா. காமராசு (ஆய்வுத் தமிழ்), தென்காசி மாவட்டத்தைச் சேர்ந்த க. சோமசுந்தரம் என்கிற கலாப்ரியா (படைப்புத்தமிழ்) ஆகியோருக்கு வழங்கி சிறப்பித்தார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இன்று தலைமைச் செயலகத்தில் உயர்கல்வித் துறை சார்பில் கடலூர், விழுப்புரம், திருப்பத்தூர், அரியலூர், மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களிலுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 59 கோடியே 93 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கல்விசார் கட்டடங்களை காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்து, தமிழ்நாட்டில் உள்ள 44 அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகளைத் திறன்மிகு மையங்களாக மேம்படுத்திடும் வகையில் டாடா டெக்னாலஜிஸ் லிமிடெட் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

மேலும், 190 உதவிப் பேராசிரியர்கள், 12 உதவி நூலகர்கள் மற்றும் 11 உதவி இயக்குநர் (உடற்கல்வி) பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

# உலகத்தில் கஷ்டமில்லாத தொழில் எது? கவர்னர் பணியை கிண்டலடித்த கனிமொழி



**சென்னை, நவ.21:** தி.மு.க. எம்.பி. கனிமொழி வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

"உலகத்தில் கஷ்டமில்லாத தொழில் எது?" என்று கேட்டபோது, "கவர்னர் வேலை பார்ப்பது" என்று தலைவர் கலைஞர் அவர்கள் பதிலளித்தார்.

மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட மாநில அரசு, தனது மக்களுக்கான உரிமைகளைக் காத்திடவும் மாநில நலன்களைப் பாதுகாக்கவும் சட்டமன்றத்தில் இயற்றி அனுப்பும் மசோதாக்களை, காலம் தாழ்த்தாமல் முத்திரையிட்டு டெல்லிக்கு அனுப்புவது என்னும் எளிய பணியை மட்டுமே ஆளுநருக்கு அரசமைப்புச் சட்டம் கொடுத்துள்ளது. இன்று உச்சநீதிமன்றமும் மீண்டும் அதை உறுதிப்படுத்தியுள்ளது.

இனியேனும் அரசமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டு, ஆளுநர் அவர்கள் அப்பணியை செவ்வனே செய்வார் என்று நம்புகிறேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# உணவு பொருட்கள் தரமில்லாவிட்டால் கியூஆர் குறியீடு மூலம் புகார் செய்யலாம்



**சென்னை, நவ.21:** சென்னையில் உள்ள ரெயில் நிலையங்களில் இயங்கும் கடைகள், உணவகங்களில் குறை தீர்க்கும் திட்டத்தை தெற்கு ரெயில்வே கடந்த வாரம் தொடங்கியது. அதன்படி உணவு பொருட்கள் தரமில்லாவிட்டால் கியூஆர் குறியீடு மூலம் புகார் செய்யும் வசதியை அறிமுகம் செய்தது. இதன்மூலம் தரமற்ற உணவை விற்ற ஒரு உணவக ஒப்பந்ததாரருக்கு அபராதம் விதித்துள்ளது.

இதுகுறித்து தெற்கு ரெயில்வே அதிகாரி ஒருவர் கூறியதாவது:-

ரெயில் நிலையங்களில் உள்ள கடைகள் மற்றும் உணவகங்களில் தரமற்ற உணவுப்பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக புகார்கள் எழுந்தன. இதையடுத்து தரமில்லாமல் உணவு பொருட்களை விற்பனை செய்யும் கடைகள் மற்றும் உணவகங்கள் மீது புகார் செய்ய கியூஆர் குறியீடு உருவாக்கப்பட்டு உள்ளது.

இந்த கியூஆர் குறியீடுகள் ரெயில் நிலைய உணவகங்கள் மற்றும் கடைகளில் இடம்பெற்றிருக்கும். பயணிகள் உணவு பொருட்கள் தொடர்பான புகார்களை பதிவு செய்வதையும், கருத்துகளை பகிர்ந்து கொள்வதையும் எளிதாக்குவதை இது நோக்கமாக கொண்டுள்ளது.

அதிக கட்டணம் வசூலித்தல், சேவையில் குறைபாடு, உணவின் மோசமான தரம், குறைவான அளவு, சுகாதாரமற்ற தண்ணீர் உள்ளிட்டவை தொடர்பான எந்தவொரு குறைகளையும் இதில் பதிவு செய்யலாம்.

சென்னை சென்ட்ரல் மற்றும் எழும்பூர் ரெயில் நிலையங்களில் அமைந்து உள்ள ஒரு சில கடைகளில் உணவின் தரம் மோசமாக இருப்பதாகவும், அதிக விலை வசூலிப்பதாகவும் புகார்கள் வந்துள்ளன.

ரெயில்வே அதிகாரிகள் சரிபார்த்ததில் புகார்கள் உண்மையானவை என்பதை கண்டறிந்து கடைகளின் ஒப்பந்ததாரருக்கு அபராதம் விதித்துள்ளனர். சென்னை கோட்டத்தில் உணவு மற்றும் பானங்களை விற்பனை செய்யும் 50 கடைகள் உள்ளன. கியூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலம் பயணிகளுக்கு அந்த கடையின் இருப்பிடம் மற்றும் நிலைய குறியீடு பற்றிய விவரங்கள் வழங்கப்படுகின்றன. ஸ்கேன் செய்தவுடன், அவர்கள் தங்கள் குறைகளை பதிவு செய்து அனுப்பலாம்.

புகார் பதிவு செய்யப்பட்டவுடன், புகார்கள் தொடர்பான எச்சரிக்கைகள் உடனடியாக அந்தந்த ஆய்வாளர்கள் மற்றும் ரெயில் நிலைய மேலாளர்களுக்கு அனுப்பப்படும். இதனால் அவர்கள் பிரச்சினைகளை உடனடியாகக் கவனித்து நடவடிக்கை எடுப்பார்கள்.

உணவு பொருட்களின் மீது அதிக கட்டணம் வசூலிப்பதை தடுப்பது மட்டுமல்லாமல், கடைகளில் போலி உணவு பொருட்கள் விற்பனையை தடுக்கவும் உதவும் என்பதால் இந்த முயற்சி மிகவும் அவசியமான ஒன்றாகும்.

இவ்வாறு அவர் கூறினார்.

### குன்றத்தூர் அருகே

# நகை, பணத்திற்காக தாய், மகள் கொலை 3 பேருக்கு 6 ஆயுள் தண்டனை



**சென்னை, நவ.21:** சென்னையை அடுத்த குன்றத்தூர் அருகே 2016ல் நகை, பணத்திற்காக தாய், மகளை கொலை செய்யப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

வசந்தா (64) மற்றும் அவரது மகள் தேன்மொழி (32) ஆகிய இருவரையும் வீட்டு வேலைக்கு வந்த சத்யா, தவ்லத் பேகம், இவர்களின் நண்பர் ஜெயக்குமார் இணைந்து கொலை செய்துள்ளனர். மேலும், தேன்மொழியின் 7 வயது மகளையும் கழுத்தில் வெட்டிவிட்டு நகை, பணத்துடன் தப்பியுள்ளனர்.

வீட்டின் உள்ளே மயங்கிக் கிடந்த சிறுமி, மறுநாள் காலை வெளியே வந்தபோதுதான் இந்த கொலைச் சம்பவம் தெரியவந்தது.

இதனையடுத்து சிறுமியின் வாக்குமூலத்தின் அடிப்படையில் சத்யா, தவ்லத் பேகம், ஜெயக்குமார் ஆகிய 3 பேரை போலீசார் கைது செய்தனர்.

இந்த வழக்கை விசாரித்து வந்த காஞ்சிபுரம் மாவட்ட நீதிமன்றம் குற்றம் சாட்டப்பட்ட மூவருக்கும் தலா இரட்டை ஆயுள் தண்டனைகள் விதித்து தீர்ப்பளித்தது. மேலும், குற்றவாளிகள் மூவருக்கும் 80 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

# வாலிபருக்கு சாகும் வரை சிறை தண்டனையை உறுதி செய்த நீதிமன்றம்



**மதுரை, நவ.21:** விருதுநகர் மாவட்டம் சிவகாசி பகுதியைச் சேர்ந்த 8 வயது சிறுமி, கடந்த 20.1.2020 அன்று பள்ளிக்கூடத்தில் இருந்து வீட்டுக்கு வந்தார். மாலை 4.30 மணி அளவில் வீட்டின் அருகே இயற்கை உபாதை கழிக்க சென்றார். அப்போது அந்தப் பகுதியில் செல்போனில் ஆபாச படம் பார்த்துக் கொண்டிருந்த அசாம் மாநிலத்தைச் சேர்ந்த மஜாம் அலி (வயது 20) என்பவர் அந்த சிறுமியை பின் தொடர்ந்து சென்றுள்ளான்.

அவர் முட்புதற்களுக்குள் சிறுமியை கட்டாயப்படுத்தி பாலியல் வன்கொடுமை செய்துள்ளான். பின்னர் சிறுமி அணிந்திருந்த உடையில் இணைக்கப்பட்டிருந்த கயிற்றின் மூலமாக அவரது கழுத்தை நெரித்து கொலை செய்து விட்டு தப்பிவிட்டார். சிறுமியை காணாமல் அவரது பெற்றோர் பல்வேறு இடங்களில் தேடினர். அப்போது அதே பகுதியில் புதருக்குள் பிணமாக சிறுமி கிடந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த சம்பவம் குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து மஜாம் அலியை கைது செய்தனர். இந்த வழக்கு ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள சிறப்பு கோர்ட்டில் விசாரிக்கப்பட்டது. மு வில் மஜாம் அலி மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டதால் அவருக்கு வாழ்நாள் முழுவதும் (அதாவது சாகும் வரை) சிறை தண்டனை விதித்து கடந்த 2022-ம் ஆண்டில் ஸ்ரீவில்லிபுத்தூர் கோர்ட்டு தீர்ப்பளித்தது.இந்த தீர்ப்புக்கு எதிராக மஜாம் அலி மதுரை ஐகோர்ட்டில் மேல்முறையீடு செய்தார். இந்த மனு நீதிபதிகள் வேல்முருகன், விக்டோரியா கவுரி ஆகியோர் முன்பு இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது கூடுதல் குற்றவியல் அரசு வக்கீல் பா.நம்பி செல்வன் ஆஜராகி, சிறுமி கொலை வழக்கில் நேரடி சாட்சியங்கள் கிடையாது. சூழ்நிலை சாட்சிகள் மற்றும் விஞ்ஞானபூர்வமான சாட்சிகளின் அடிப்படையில் கீழ் கோர்ட்டு மேல்முறையீட்டாளருக்கு தண்டனை விதித்து உள்ளது.

இறந்த சிறுமியின் உடலில் மேல்முறையீட்டாளர் முடி இருந்தது.இது அவருடையதுதான் என்பது விஞ்ஞானபூர்வமான பரிசோதனையில் உறுதிப் படுத்தப்பட்டு உள்ளது. எனவே மனுதாரர் மீதான குற்றச்சாட்டுகள் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டு உள்ளது. மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என வாதாடினார்.

இதனை பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், இந்த மேல்முறையீட்டாளருக்கு கீழ் கோர்ட்டு விதித்த சாகும் வரை தண்டனையை உறுதி செய்தும், அவருடைய மேல்முறையீட்டு மனுவை தள்ளு படி செய்தும் உத்தரவிட்டனர்.

# திருவத்திமலை வாராஹி அம்மன் பூஜை



விழுப்புரம் மாவட்டம் செஞ்சியை அடுத்த திருவத்திமலை வாராகி அம்மனுக்கு கார்த்திகை மாத அமாவாசை யை முன்னிட்டு சிறப்பு யாகசாலை பூஜை மற்றும் விளக்குபூஜை நடைபெற்றது.

# சோலார் மின்வேலிகளை பிடுங்கி வீசி தோட்டத்தில் புகுந்த காட்டுயானை

## 3 ஏக்கர் பயிர்கள் பாழ், தென்னை, வாழைகளும் சாய்ப்பு



**திண்டுக்கல், நவ.21:** கன்னிவாடி கருப்பசேர்வை காரன்பட்டியில் சோலார் மின்சார கம்பிகளை பிடுங்கி வீசி தோட்டத்தில் புகுந்த காட்டுயானைகள் 3 ஏக்கரில் சோளம், தென்னை, வாழைக்கன்றுகளை நாசம் செய்தன.

திண்டுக்கல் மாவட்டம் கன்னிவாடி கருப்பசேர்வைக்காரன்பட்டி பகுதி கொடைக்கானல் மலை அடிவாரத்தில் அமைந்துள்ளது. இப்பகுதியில் தென்னை, வாழை ,மக்காச்சோளம் விவசாயம் செய்யப்படுகிறது. 100 ஏக்கருக்கு மேல் மக்காச்சோளம் அறுவடைக்கு தயார் நிலையில் இருந்தது.

இந்நிலையில் கொடைக்கானல் மலைப்பகுதியில் இருந்து நேற்று முன்தினம் இரவு கீழிறங்கிய 10க்கு மேற்பட்ட காட்டுயானைகள் நடராஜன் என்பவரின் மக்காச்சோள தோட்டத்துக்குள் புகுந்து பயிர்களை முழுமையாக அழித்தது.

இதன் அருகே தோட்டத்தில் உள்ள தென்னை, வாழைக்கன்றுகளையும் சேதப்படுத்தின.

நடராஜன் கூறுகையில் ''6 ஏக்கரில் மக்காச்சோளம் பயிரிட்டிருந்தேன். பாதுகாப்புக்காக சோலார் மின்வேலி அமைத்திருந்தேன். இரவில் வேலிகளை பிடுங்கி ஏறிந்து தோட்டத்துக்குள் புகுந்த காட்டுயானைகள் அறுவடை நேரத்தில் பயிர்களை அழித்துவிட்டன. ரூ.5 லட்சம் செலவு செய்து பெரும் நஷ்டத்தை சந்திக்க வேண்டியுள்ளது. யானைகளால் ஏற்பட்ட இழப்புக்கு தமிழக அரசு உரிய நிவாரணம் வழங்க வேண்டும்' என்றார்.




# அய்யங்கோட்டை அரசுப் பள்ளி பிளஸ் டு மாணவர்களுக்கு கணிப்பான்கள் வழங்கும் விழா



**மதுரை, நவ.21:** அய்யங்கோட்டை அரசு மேல்நிலைப் பள்ளியில் “கணிப்பான் வழங்கும் விழா” சிறப்பாக நடைபெற்றது தமிழ்நாடு மாநில பாடத்திட்டத்தில் படிக்கும் மாணவர்களின் நீண்ட நாள் கோரிக்கை நிறைவேறியுள்ளது. வரும் 2026ம் ஆண்டு முதல் 12ம் வகுப்பு பொதுத் தேர்வில் கணக்குப்பதிவியல் பாடத்திற்கான தேர்வில் கால்குலேட்டர் பயன்படுத்த அனுமதி வழங்கப்படுவதாக பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளார். இந்த மாபெரும் மாற்றம், மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பெரும் உற்சாகத்தைக் கொண்டுவந்துள்ளது.

இந்த அறிவிப்பை முன்னிட்டு, குழந்தைகள் தின சிறப்பு நிகழ்ச்சியாக, மதுரை மாவட்டம் அய்யங்கோட்டை அரசு மேல்நிலைப் பள்ளி 12ம் வகுப்பு மாணவர்களுக்காக பாண்டியர்கள் தேடி பயணம் வரலாற்று ஆய்வு குழு ஒரு சமூகப் பொறுப்புணர்வு நிகழ்வை நடத்தியது. நிகழ்வில், பாண்டியர்கள் தேடி பயணம் வரலாற்று ஆய்வுக் குழுவின் தலைமை ஆய்வாளர் மற்றும் பாண்டியநாடு அறக்கட்டளை நிறுவனர் மணிகண்டன் , பள்ளியில் கல்வி பயிலும் அனைத்து 12ம் வகுப்பு மாணவமாணவியர்களுக்கும் பயன்பாடுச்சார் கால்குலேட்டர்களை இலவசமாக வழங்கினார். மாணவர்களுக்கு வழங்கிய உரையில் வரும் பொதுத் தேர்வில் கால்குலேட்டர் பயன் பெருக்கும் விதம், கணக்குப்பதிவியல் பாடத்தில் விரைவான கணக்கீடு திறனை வளர்த்துக் கொள்ளும் வழிகள், தேர்வுக்கு எப்படி துல்லியமாகவும் தெளிவாகவும் தயாராக வேண்டும், என பல முக்கியமான அறிவுரைகளை பகிர்ந்து வைத்தார். இந்த நிகழ்வு மாணவர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றது. கால்குலேட்டர் வழங்கப்பட்டதற்கு மாணவர்கள் மகிழ்ச்சி தெரிவித்ததோடு, பொதுத் தேர்வுக்கு இது பெரும் உதவியாக இருக்கும் என கூறினார்கள்.

# செஞ்சியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி திறப்பு விழா




**விழுப்புரம், நவ.21:** விழுப்புரம் மாவட்டம் செஞ்சியை அடுத்த சிட்டாம்பூண்டியில் அமைந்து உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கலைக்கல்லூரி புதிய கட்டிடக் திறப்பு விழா நடைபெற்றது செஞ்சி தொகுதி மக்களின் சுமார் நாற்பது ஆண்டுகால கோரிக்கை கனவாக இருந்து வந்தது மூன்று ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்ட இந்த பதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி இன்று புதிய கட்டிடத்தை காணொளி காட்சி வாயலாக தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்திறந்து வைத்தார் இந்நிகழ்விவில் மாவட்ட ஆட்சியர் ஷேக் அப்துல் ரஹ்மான் இ.ஆ.ப கல்லூரி பேராசிரியர்கள் மாணவர்கள் செஞ்சிமஸ்தான் எம்எல்ஏ மற்றும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ஒன்றிய சேர்மேன் ஊராட்சி மன்றத் தலைவர்கள் கலந்துகொண்டனர்

# உலக குழந்தைகள் தின விழா




**மதுரை, நவ.21:** மதுரை மாவட்டம் மதுரை கிழக்கு ஒன்றியம் எல் கே பி நகர் அரசு பள்ளியில் உலக குழந்தைகள் தின விழா தலைமை ஆசிரியர் தென்னவன் தலைமையில் நடைபெற்றது. ஆசிரியர் ராஜவடிவேல் முன்னிலை வகித்தார். ஆசிரியை விஜயலட்சுமி வரவேற்றார். ஆசிரியை அகிலா தொகுத்து வழங்கினார். உலக குழந்தைகள் தினத்தை முன்னிட்டு மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. வினாடி வினா நடைபெற்றது. வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

குழந்தைகள் உரிமைகள் குறித்து எட்டாம் வகுப்பு மாணவி பவித்ரா பேசினார். குழந்தைகள் உதவி மைய தொலைபேசி எண்கள் 1098, 14417 ஆகியவை பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. குழந்தைகள் தின கருப்பொருள் உறுதி மொழியாக ஏற்கப்பட்டது. ஆசிரியை சித்ரா நன்றி கூறினார்.

# கள்ளக்காதலனுடன் மோட்டார் சைக்கிளில் வந்த மனைவி... ஆத்திரத்தில் கணவர் செய்த கொடூர செயல்

**சென்னை, நவ.21:** திருவண்ணாமலை, கொடிகுப்பம் பகுதியைச் சேர்ந்தவர் ராஜா (வயது 56). இவரது மனைவி சுலோச்சனா (55). இருவரும் சென்னை போரூர் அடுத்த முகலிவாக்கம் பகுதியில் தங்கி, கட்டிட வேலை செய்து வருகின்றனர்.

இதற்கிடையில் சுலோச்சனாவுக்கு, வேதநாயகம் என்பவருடன் கள்ளக்காதல் ஏற்பட்டது. இதனை அறிந்த ராஜா, மனைவியை கண்டித்தார். இதனால் கணவன்-மனைவி இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்தது. இந்தநிலையில் நேற்று மாலை சொந்த ஊர் செல்வதற்காக ராஜா, போரூர் சுங்கச்சாவடி பஸ் நிறுத்தத்தில் மனைவிக்காக காத்திருந்தார்.

அப்போது அவரது மனைவி சுலோச்சனா, தனது கள்ளக்காதலன் வேதநாயகத்துடன் மோட்டார்சைக்கிளில் அங்கு வந்தார். இதனால் ஆத்திரம் அடைந்த ராஜா, பையில் வைத்திருந்த சுத்தியலை எடுத்து மனைவியின் தலையில் ஓங்கி அடித்தார். இதில் அவரது மண்டை உடைந்து ரத்தம் கொட்டியது.

இதையடுத்து சுலோச்சனாவுடன் வந்த வேதநாயகம் மற்றும் அவரது நண்பர்கள், ராஜாவை சரமாரியாக தாக்கியதில் அவரும் காயம் அடைந்தார். பின்னர் கணவன்-மனைவி இருவரையும் சிகிச்சைக்காககீழ்ப்பாக்கம் அரசு ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். இதுகுறித்து வானகரம் போலீசார் விசாரித்து வருகின்றனர். இந்த சம்பவம் சென்னையில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.



# தினம் ஒரு குறள்

**உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.** - குறள் 140

లోకపోక డెరిగి పోకున్న వాడెంత
చదువు జదినియున్న జదువనట్లె. -కురల్ 140

जिनको लोकाचार की, अनुगति का नहिं ज्ञान ।
ज्ञाता हों सब शास्त्र के, जानों उन्हें अजान ॥ - कुराल 140

Ulakaththotu Otta Ozhukal Palakatrum
Kallaar Arivilaa Thaar - Kural 140

# கே.வி.குப்பம் அபிராமி மகளிர் கல்லூரியில் தமிழ் கனவு நிகழ்ச்சி!




**வேலூர், நவ.21:** வேலூர் மாவட்டம், கே.வி.குப்பம் அபிராமி மகளிர் கலைக் கல்லூரியில் தமிழ் கனவு நிகழ்ச்சி நடந்தது.

இதில் வேலூர் மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி கலந்துகொண்டு தமிழ் கனவு நிகழ்ச்சியை தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் அறிஞர் வே.பொன்ராஜ் மற்றும் வேலூர் மாவட்ட வருவாய் அலுவலர் சிவசுப்பிரமணியன் மற்றும் பல தமிழ் அறிஞர்கள், கல்லூரி பேராசிரியர்கள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்த நிகழ்ச்சியில் தமிழ் மொழியின் தனித்தன்மையை அனைவரும் விரிவாக விளக்கி கூறியது குறிப்பிடத்தக்கது.

## ராஜபாளையம் அருகே

# கோவில் காவலாளிகள் கொலையில் கைதான வாலிபருக்கு கை, காலில் மாவுக்கட்டு

**விருதுநகர், நவ.21:** விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் அருகே தேவதானம் கிராமத்தில் நச்சாடை தவிர்த்தருளிய சுவாமி கோவில் உள்ளது. இந்த கோவிலில் காவலாளிகளாக அந்த பகுதியை சேர்ந்த சங்கர பாண்டியன் (வயது54), பேச்சிமுத்து (60) ஆகிய 2 பேர் பணியாற்றி வந்தனர்.

சம்பவத்தன்று நள்ளிரவில் கோவிலுக்குள் புகுந்து காவலாளிகள் 2 பேரையும் வெட்டிக்கொன்று உண்டியலை உடைத்து, வெள்ளி பொருட்களை சேதப்படுத்திவிட்டு கொள்ளையர்கள் தப்பிச்சென்றனர். இந்த சம்பவம் தொடர்பாக அதே பகுதியை சேர்ந்த நாகராஜ் (25) என்பவரை ஏற்கனவே போலீசார் கைது செய்தனர். நேற்று முன்தினம் முனியசாமி (35) என்பவரும் கைது செய்யப்பட்டார். அவரிடம் சேத்தூர் போலீசார் விசாரணை நடத்தினர்.

அப்போது கொலைக்கு பயன்படுத்திய ஆயுதங்களை தென்காசி சாலையில் உள்ள தேவி ஆற்றுப்பாலம் அருகே மறைத்து வைத்திருப்பதாக கூறியுள்ளார். இதையடுத்து அவரை அழைத்துக் கொண்டு போலீசார் அங்கு சென்றனர். அங்கு மறைத்து வைத்திருந்த கத்தி, அரிவாள் மற்றும் கண்காணிப்பு கேமராவுக்கான ஹார்ட் டிஸ்க் ஆகியவற்றை கைப்பற்றினர்.


அப்போது அங்கிருந்து திடீரென தப்ப முயன்ற முனியசாமி அங்குள்ள பாலத்தில் இருந்து கீழே குதித்தார். இதில் அவருக்கு கை, காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. உடனே அவரை போலீசார் மீட்டு ராஜபாளையம் அரசு ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அங்கு அவருக்கு மாவுக்கட்டு போடப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

# சென்னையில் மின் தடை ஏற்படும் இடங்கள்

**சென்னை, நவ.21:** சென்னையில் 21.11.2025 அன்று காலை 09:00 மணி முதல் மதியம் 2:00 மணி வரை மின் வாரிய பராமரிப்பு பணி காரணமாக கீழ்காணும் இடங்களில் மின் விநியோகம் நிறுத்தப்படும். மதியம் 2:00 மணிக்குள் பராமரிப்பு பணி முடிவடைந்தவுடன் மின் விநியோகம் கொடுக்கப்படும்.

தரமணி:

எம்ஜிஆர் சாலை, சாந்தியப்பன் சாலை, கோதண்டராமன் தெரு, பெருங்குடி, ஓஎம்ஆர்,



காமராஜர் நகர், குறிஞ்சி நகர், அண்ணா நெடுஞ்சாலை, நேரு நகர், கொட்டிவாக்கம், ஸ்ரீனிவாசா நகர், ஜெயேந்திரா காலனி, திருவள்ளுவர் தெரு, கற்பக விநாயகர் தெரு, சர்ச் சாலை, சிபிஐ காலனி மற்றும் மேற்காணும் இடங்களின் சுற்றியுள்ள அனைத்து பகுதிகளும்.

# கவிதை அரங்கம்!



எதையும் தாங்கும்
மனவலிமை ஒன்று
உனக்குள் இருந்தால்,
தோல்விகளை துவைத்து
காயப்போட்டு விடலாம்..!!

ஒருவனுடைய
வெற்றிக்கு முன்னால்
வேண்டுமானால் பரிசும்
பாராட்டும் இருக்கலாம்
ஆனால் அவனுக்கு
பின்னால் நாங்கள் தான்
இருக்கிறோம் அவமானம்
நிராகரிப்பு தோல்வி.

மாற்றி யோசனை
செய்யாமல் மாற்றங்கள்
வருவதில்லை.

முடியாது என்பது.!!
முற்றுப்புள்ளி.!! முடியும்
என்பது.!! வெற்றிப்புள்ளி

புத்திசாலியா முட்டாளா
என்னடி வாழ்க்கையில்
நிறைய கற்றுக்
கொள்ளலாம்.

வாழ்வின் பாடத்தை கற்றுக்
கொள்ள பெற்றோர்கள்
கடந்து வந்த பாதையை
அறிந்து கொண்டாலே
போதும்.


## ஆமையின் பயணம்...



ஆமை ஓடாது.
வேகம் எடுக்காது...
ஆனால் அது எந்த திசையில் செல்ல வேண்டும் என்று முடிவு செய்துவிட்டால்,
அது இடைவேளையின்றி, உறுதியாக முன்னேறிக் கொண்டே இருக்கும்.
அதன் மெதுவான நடை — தான் இலக்கை அடைய வழி காட்டும் சக்தி.
வேகமாக ஆரம்பித்து அதே வேகத்தில் நிறுத்துவதை விட...
உறுதியும் தொடர்ச்சியும் முக்கியம்.
நாள் தோறும் எடுக்கும் அந்த சிறிய முயற்சிதான்
நீங்கள் கனவு காணும் இடத்திற்குப்
பாதுகாப்பாகக் கொண்டு செல்லும் சக்தி.
வாழ்க வளமுடன்
என்றும் அன்புடன்

நன்றி - ஆனந்தி

# நடுநிசியில்



விலாஸாக்கு திடீரென்று விழிப்பு வந்தது.. சும்மா இல்லை .. யாரோ தன்னை உலுக்குவதை உணர்ந்து..

சட்டென்று எழுந்து.. சுவற்றை தடவி லைட்டை போட்டாள்.. நிசப்தம். ஏசியின் சில்லிப்பு.. மெல்லிய ரீங்காரத்துடன்..

அப்படியும் அவள் நெற்றியில் வியர்வை முத்துகள்.கனவை உண்மை என்று இதுவரை உணர்ந்ததில்லை..மெல்ல நேரத்தை பார்த்தாள் ..நடு இரவு .. 12.05..

பயன களைப்புடன் இப்பதான் 10 மணிக்கு வந்து படுத்தாள்.. எப்படி இப்படி திடீர் விழிப்பு.. யோசித்தவாறே.. நாளை தன் செமினாருக்கான பாயின்ட்களை அப்படியே மெல்ல நடந்தவாறு ஞாபகப்படுத்திக்கொண்டாள்.. தன் தோழி அடுத்த அறையில்.. இருவரும்தான் ப்ராஜெக்ட் ப்ரெசென்டேஷனுக்காக தஞ்சையிலிருந்து சென்னைக்கு ரயிலில் வந்து தங்கியிருக்கின்றனர்.. எல்லாமே சிங்கிள் ரூம்தான்.. பெண்களுக்கானது.

ரோட்டின் எதிர் பக்கம் ஆண்களுக்கான வரிசை அறைகள். அதுவும் சிங்கிள் ரூம்தான்..சற்று காலடி சத்தம் வாசல் பக்கம் கேட்க.. தைரியத்தை வரவைத்துக்கொண்டு கதவைத்திறந்தாள்..

பக்கத்து அறையில் யாரோ நுழைந்தது பார்த்து திடுக்கிட்டாள்.. அது அவள் தோழி தேஜஸ்வினி தங்கியிருப்பதாச்சே! ஆனால் எதுவும் வித்தியாச சத்தங்கள் இல்லை..கூச்சல் இல்லை என்றதும் படபடவென்று அடித்த மனது மீண்டும் சமநிலைக்கு வந்தது..

குறுகுறுவென அந்தக்கதவை பார்த்துக்கொண்டேருந்தாள்..படியில் வாட்ச்மேன் வந்து நின்று இவளுக்கு சைகையால் என்ன என்று கேட்டார்.. இவள் வேகமாக அவனிடம்.. " இந்த ரூமுக்குள் யாரோ நுழைந்தார்கள்..நான் பார்த்தேன்", என்று சொல்ல..

" நான் முழிச்சிக்கிட்டுதான இருக்கேன்..யாரையும் பார்க்கல. போய் படும்மா..பேய் உலாவுற நேரத்துல காரிடார்ல நிக்கிற.. போ உன் ரூமுக்குள்ள..", ஆஜானுபாகுவான அவன் சொல்ல.. வேறு வழியின்றி தன் ரூமுக்குள் நுழைந்துதாள்..

மணி 12.35 காண்பித்தது.. இப்போ மீண்டும் நிழலுருவம் அந்த கதவின் கீழிடுக்கில் தெரிந்தது. மனசில் பயம் அப்பிக்கொள்ள.. கொஞ்சம் நிதானித்த அந்த நிழல் தாண்டி அந்தப்பக்கம் போனதை உணர்ந்தாள்..

எழுவோமா ..பார்ப்போமா என்று நினைக்கையிலியே மீண்டும் அதே நிழல் இவள் ரூம் வாசலில்.. அப்படியே தலைவரை இழுத்து போர்த்தி படுத்தவள்தான்..எத்தனை நேரம் நடுங்கிக்கொண்டிருந்தாள்.. எப்போது உறங்கினாள் என்று தெரியவில்லை.

காலை 7 மணிக்கு ரூம் கதவு தட்டப்பட.. அவசரமாய் விழித்து கதவை திறக்க, அங்கு தேஜஸ்வினி..வாயில் டூத்பிரஷ்ஷீடன்..

"எந்திரிடி..குளிச்சி கிளம்ப சரியாயிருக்கும்..நான் வரலன்னா எந்திரிச்சிருக்க மாட்ட போல. கண்ணெல்லாம் சிவந்து கிடக்கு..", சொன்ன தோழியை ..விருட்டென் ரூமுக்குள் இழுத்தாள்..

"யாருடி உன் ரூமுக்கு நைட் வந்தது.. சொல்லு..நான் பாத்தேன்..மறைக்காம சொல்லு!"

என் ரூமுக்கா? ..நீ வேற..நேத்து படுத்த நான் நடுவுல பாத்ரூம் போகக்கூட எழுந்துக்கல..இதுல.. நீ வேற பாத்தியா?..கெட்டுச்சி போ.இப்படி யோசிச்சிதான் சரியா தூங்காம கண்ணு செவந்து கிடக்கா.. இன்னும் வேணா கொஞ்ச நேரம் தூங்கு..நீதான் விரல்நுனியில செமினார் ஸ்பீச் வெச்சிருப்பியே.. என்றவளின் விரல்களில்..அந்த.. நெயில் பாலிஷ்.....விலாஸா கண்களில் தென்பட்டுவிட..

அவள் விழி நேராக பார்த்தாள்.. "பிரனவ்தான உன் ரூம் வந்தான்.. சொல்லு..இல்லை..இப்பவே நம் HODக்கு சொல்லிடுவேன்..

அவளும் சற்று இவள் விழிகளை நேராய் பார்த்தாள் பின்,அவள் பாத்ரூம்லியே வாய் கொப்பளித்து வந்தாள்..

" எதை வெச்சி இப்படி சொல்ற.. சொல்லு.உன் லவ்வர் மேல உனக்கு நம்பிக்கை இல்லையா..?"

" நான் மட்டும்தான்டி லவ்வ சொல்லியிருக்கேன்..அவன் இன்னும் பதிலே சொல்லல..இப்ப நீ சொல்லு ..உங்களுக்குள்ள பழக்கம் இருக்குன்னு ஏன் சொல்லல.. சொல்லுடி..!"

" சைல்டிஷ்ஷா பிஹேவ் பண்ணாத.. நீ அவனை லவ் பன்றேன்னு எங்கிட்ட சொல்றதுக்கு முன்னாடியே அவன் என்ட்ட பிரபோஸ் பண்ணி நானும் ஒத்துக்கிட்டேன்.அதை உன்கிட்ட சொல்ல வரும்போதுதான்.. நீ அவன் மேல உள்ள ஈர்ப்பை சொன்ன..ஷாக் ஆகிட்டு..நாம L.K.G லேருந்து ஃப்ரெண்டிஸ்டி..நான் எப்படி உன்கிட்ட அந்த சமயம் எங்க லவ்வ சொல்ல முடியும்..?அதான் மறைச்சேன்..

"ச்சீ.உண்மைய சொல்லியிருந்தா ..நான் விலகியிருப்பேன்டி..உங்களை பிரிச்சிடுவன்னு நினைச்சியா. நாமெல்லாம் அடல்ட்ஸ்..இன்னும் L.K.G படிக்கல நாம.."

" ஆமான்டி ..ஆனா, உன் மனசை காயப்படுத்த விரும்பல..உண்மைய சொல்றேன்..நேத்து ப்ரணவ் என் ரூமுக்கு வந்தான்.சும்மா நான்தான் விளையாட்டா, உண்மையான லவ் இருந்தா இப்ப என் ரூமுக்கு வானு சொன்னேன்..

உடனே வாட்மேன்கிட்ட கொஞ்சம் ரூபாவ தள்ளி,உடனே பாத்துட்டு வந்துடுவேன்னு சொல்லிட்டு என் ரூமுக்கு வந்தான்..நீ ரூம் லைட்ட போட்டதும் அவன் பேஜாராயிட்டான்.. நான் கதவை திறக்க..சட்னு உள்ள வந்தவன் கம்னு இருந்தான் ..

சைகையில நீ பாத்துட்டேன்னு சொன்னான்..நீ நகருர மாதிரி தெரியல ..எனக்கும் என்ன பன்றதுன்னு தெரியல..கரீக்டா வாட்ச்மேன் டைம் ஆகிட்டேனு பார்க்க மேல வந்தா, நீ நின்னதை பாத்து உன்னை எப்படியோ ரூமுக்குள்ள போக வைக்க..இவன் சட்னு ரூம திறந்து ஓடிட்டான்..

வாட்ச்மேன்தான் ..உன் ரூம் வாசல்ல கொஞ்ச நேரம் நின்னாரு..பிறகு எந்த சத்தமும் இல்லன்ன உடனே எனக்கு கை காமிக்க..நான் கதவை மெல்ல சாத்திட்டேன்.அவரும் பிறகு போயிட்டாரு.."

இதான் நடந்தது..இப்ப சொல்லு அவன்தான் வந்ததுனு நீ எப்படி கெஸ் பண்ணுன..?

"ஏன்னா ..நீயும் நானும் ட்ரெயின்ல ஒரே கலர் நெயில் பாலிஷ்தான் பேசிக்கிட்டே போட்டோம்.ஆனா இப்ப நெயில் பாலிஷ் உன் கையில இல்லை...

இந்த லேடிஸ் ஏன்தான் நெயில் பாலிஷ் போடுறாங்களோனு..அப்ப பிரணவ் கிண்டலடிச்சான்..

அதான் ..நீ அவனுக்காக போட்டத ரிமூவ் பண்ணியிருக்க..ரைட்டா..?

இன்னும் ஒன்னு ..அந்த வாட்ச்மேன் என்னைய விரட்டுனதும் நான் ரூம் உள்ளே வந்தாலும் சின்ன இடுக்குல பாத்துட்டுதான் இருந்தேன். ஓடுன ஆள் பிரனவ்னு மனசுக்கு தோணுச்சி.இப்ப உன் நகம் கன்ஃபர்ம் பண்ணிடுச்சி..

நான் கதவை சாத்தின பிறகும் நிழல் தெரிஞ்சப்பதான் பயமா இருந்தது. வாட்ச்மேன் இல்ல பிரனவ் யாரோ ஏன் இங்க நிக்கனும்னு ஒரு பீதி.."

" சாரிடி.. எங்க காதல உன்கிட்ட மறைச்சது தப்புதான்..மன்னிச்சிடுடி. ஆனா..உன்னுள்ளே ஒரு துப்பறிவாளி இருக்கா போல ".

"ஆமா..வாளி இருக்கா.. என்னை கஷ்டப்படுத்தக்கூடாதுன்னு உண்மைய சொல்லலங்கிறத நான் நம்புறேன்..காதலர்கள் வாழ்க..ஆனா இப்படி நடுராத்திரி ரூமுக்கு வரதெல்லாம் ரொம்ப ஓவருடி.."

" அந்த ரொமான்ஸதான் நீ முழிச்சி கெடுத்தியே", தேஜஸ்வினி அவள் முதுகில் செல்லமாய் அடிக்க..

"அடுத்த முறை வர சொல்லு.. காவலுக்கு நிக்கிறேன்..ஆளை பாரு.."..இருவரும் கலகலவென சிரிக்க ஆரம்பித்தனர்..

முற்றும்

தஞ்சை பியூட்டிஷியன்
உமாதேவி சேகர்

**ஆர்.சீதாராமன்.**
- சீர்காழி

# தினம் ஒரு சமையல்



## சக்கர வள்ளி கிழங்கு குலோப் ஜாமுன்

**தேவையான பொருட்கள்:**

| | |
|---|---|
| சர்க்கரைவள்ளி கிழங்கு | -1/2 கிலோ |
| பால் பவுடர் | -1/4 கப் |
| கோதுமை மாவு | -2 டேபிள் ஸ்பூன் |
| நாட்டு சக்கரை | -1 1/2 கப் |
| தண்ணீர் | -1 1/2 கப் |
| ஏலக்காய் | -1/4 டீஸ்பூன் |
| எண்ணெய் | -பொறிப்பதற்கு |

**செய்முறை:**




முதலில் சர்க்கரை வள்ளி கிழங்கின் முனைகளை நறுக்கி சிறு துண்டுகளாக்கி இட்லி சட்டியில் வைத்து இட்லியை வேக வைப்பது போல் பத்து நிமிடம் வேகவைத்து எடுத்துக் கொள்ளுங்கள். சர்க்கரை வள்ளி கிழங்கு ஆறியதும் அதன் தோலை நீக்கி நன்றாக மசித்துக்கொள்ள வேண்டும். மற்றொரு புறத்தில் அடுப்பில் ஒரு பாத்திரத்தை வைத்து அதில் நாட்டு சர்க்கரை தண்ணீர் ஊற்றி சர்க்கரை நன்றாக கரையும் வரை அடுப்பில் வைத்திருக்க வேண்டும். நன்றாக கரைந்த பிறகு அதை வடிகட்டி வேறொரு பாத்திரத்தில் மாற்றி அதனுடன் ஏலக்காய் துளை போட்டு தயார் செய்து வைத்துக் கொள்ளுங்கள்.

இப்பொழுது மசித்த சர்க்கரை வள்ளிக்கிழங்கில் பால் பவுடர் மற்றும் கோதுமை மாவையும் சேர்த்து சப்பாத்தி மாவு பதத்திற்கு நன்றாக பிணைந்து கொள்ளுங்கள். பிணைந்த உடனேயே இதை சிறுசிறு உருண்டைகளாக உருட்டி எடுத்து வைத்துக் கொள்ளுங்கள். அடுப்பில் ஒரு கடாயை வைத்து அதில் குலோப் ஜாமினை பொரிப்பதற்கு தேவையான அளவு எண்ணெயை ஊற்ற வேண்டும். எண்ணெய் நன்றாக காய்ந்த பிறகு அடுப்பை குறைந்த தீயில் வைத்து உருட்டிய உருண்டைகளை அதில் போட்டு ஒரு நிமிடம் அப்படியே விட்டு விட வேண்டும்.

பிறகு அதை கரண்டியை பயன்படுத்தி நன்றாக கலந்து பொன்னிறமாகும் வரை வேக விட வேண்டும். பொன்னிறமான பிறகு அதை எடுத்து அப்படியே தயார் செய்து வைத்திருக்கும் ஜீராவில் போட்டு விட வேண்டும். இரண்டு மணி நேரம் குலோப்ஜாமூன் சீராவில் ஊறிய பிறகு விருப்பத்திற்கு ஏற்றவாறு பருப்பு வகைகளை தூவி சாப்பிட கொடுக்கலாம். மிகவும் சுவையான அதே சமயம் சத்தான குலோப் ஜாமுன் தயாராகிவிட்டது.

## சிறுபீளை நன்மைகள்



சிறுபீளையின் முக்கிய நன்மைகள் சிறுநீரகக் கற்களை கரைப்பது, சிறுநீர் எரிச்சல் மற்றும் நீரடைப்பு போன்ற சிறுநீரகப் பிரச்சனைகளுக்கு தீர்வளிப்பது, மாதவிடாய் கோளாறுகளை சரிசெய்வது, மற்றும் பாம்புக்கடி போன்ற விஷங்களுக்கு எதிராக செயல்படுவது ஆகியவை ஆகும். இந்த மூலிகை சிறுநீரை பெருக்கி, இரத்தச் சூட்டைக் கட்டுப்படுத்தவும் உதவுகிறது.

சிறுநீரக ஆரோக்கியம்

சிறுநீரகக் கற்கள்: சிறுநீரகக் கற்களைக் கரைத்து, சிறுநீர்ப் பாதை வழியாக வெளியேற்ற உதவுகிறது.

சிறுநீரக கோளாறுகள்: சிறுநீர்ப்பை அழற்சி, நீரடைப்பு, சிறுநீர் எரிச்சல் போன்ற பிரச்சனைகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

சிறுநீரை பெருக்கும்: சிறுநீரைப் பெருக்கி வெளியேற்ற உதவுகிறது.

மாதவிடாய் மற்றும் கர்ப்பிணிப் பெண்களுக்கு

மாதவிடாய் கோளாறுகள்: பெண்களின் மாதவிடாய் காலங்களில் ஏற்படும் அதிகப்படியான இரத்தப் போக்கைக் கட்டுப்படுத்துகிறது.

கர்ப்பிணிப் பெண்கள்: கர்ப்ப காலத்தில் ஏற்படும் தளர்ச்சியை நீக்கி, உடலுக்கு வலிமை சேர்க்கிறது.

மற்ற மருத்துவப் பயன்கள்

பாம்புக்கடி: சில வகை பாம்புக்கடி மற்றும் வெறிநாய் கடியின் விஷத்தை நீக்க உதவுகிறது.

இரத்தச் சூடு: இரத்தத்தில் இரத்தம் கலந்து வரும் நிலையை கட்டுப்படுத்தும்.

வயிற்றுப் புழுக்கள்: வயிற்றுப் புழுக்களை நீக்க உதவுகிறது.

எப்படி பயன்படுத்துவது

சாறு: சிறுபீளையின் இலைகளை இடித்து, சாறு எடுத்து, மூன்று வேளைகள் குடிக்கலாம்.

குடிநீர்: சிறுபீளை செடியை முழுவதுமாக பயன்படுத்தலாம். இது சிறுநீரக கற்களை கரைக்க உதவுகிறது.

கஞ்சி: இதன் வேரை அரைத்து, பனைவெல்லத்துடன் சேர்த்து கஞ்சி செய்து குடிக்கலாம்.

# காந்தா படத்தில் நடிக்க துல்கர், பாக்யஸ்ரீ போர்ஸ் மற்றும் சமுத்திரக்கனி வாங்கிய சம்பளம்.. எவ்வளவு தெரியுமா




இயக்குநர் செல்வமணி செல்வராஜ் இயக்கத்தில் துல்கர் சல்மான் நடிப்பில் உருவாகி கடந்த வாரம் வெளிவந்த படம் காந்தா.

இப்படத்தில் சமுத்திரக்கனி, ராணா டகுபதி, பாக்யஸ்ரீ போர்ஸ் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருந்தனர். பெரிதும் எதிர்பார்க்கப்பட்டு வெளிவந்த இப்படம் கலவையான விமர்சனங்களை பெற்றது.

நடிகர்களின் நடிப்பு மிக அருமையாக இருந்தாலும், விமர்சன ரீதியாக படம் பின்னடைவை சந்தித்தது. மேலும் எதிர்பார்த்த அளவிற்கு வசூலும் வரவில்லை.

இந்த நிலையில், காந்தா படத்தில் நடிப்பதற்காக துல்கர் சல்மான், ராணா, சமுத்திரக்கனி மற்றும் பாக்யஸ்ரீ போர்ஸ் ஆகியோர் வாங்கிய சம்பளம் குறித்து தகவல் வெளியாகியுள்ளது.

துல்கர் சல்மான் – ரூ. 8 கோடி முதல் ரூ. 10 கோடி

ராணா டகுபதி – ரூ. 6 கோடி முதல் ரூ. 8 கோடி

பாக்யஸ்ரீ போர்ஸ் – ரூ. 50 லட்சம் முதல் ரூ. 1 கோடி

சமுத்திரக்கனி – ரூ. 50 லட்சம் முதல் ரூ. 1 கோடி

சம்பளத்தை தாண்டி படத்தின் தயாரிப்பாளர்களான ராணா மற்றும் துல்கர் இருவருக்கும் லாபத்திலும் பங்கு உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.



சினிமா

நடிகை ஆஷிகா ரங்கநாதன் அழகிய உடையில் இருக்கும் சமீபத்திய போட்டோ ஷூட்.

ரசிகர்களை கவரும் ஸ்டில்கள் இதோ

# விபத்தில் சிக்கி உயிருக்கு போராடிய நடிகர் கவின்.. காப்பாற்றிய மதுரை மக்கள்!!

சின்னத்திரையில் இருந்து வெள்ளித்திரைக்கு சென்று மக்கள் மனதில் தனி இடத்தை பிடித்துள்ளார் நடிகர் கவின். இவர் நடிப்பில் அடுத்ததாக வெளிவரவிருக்கும் படம் மாஸ்க்.

இப்படத்தை அறிமுக இயக்குநர் விக்ரணன் அசோக் இயக்க ஆண்ட்ரியாவுடன் இணைந்து கவின் இப்படத்தில் நடித்திருக்கிறார். நாளை திரையரங்கில் வெளிவரவிருக்கும் இப்படத்தை காண ரசிகர்கள் ஆவலுடன் காத்திருக்கிறார்கள்.

மாஸ்க் படக்குழுவினர் படத்தின் புரோமோஷனை தொடர்ந்து நடத்தி வருகிறார்கள். சமீபத்தில் பிரபல கல்லூரியில் இப்படத்தின் புரோமோஷன் நடைபெற்றது. இதில் நடிகர் கவின், மதுரையில் தனக்கு நடந்த விபத்து குறித்து மனம் திறந்து பேசினார்.

இதில், “மதுரையில் 2012ஆம் ஆண்டு எனக்கு விபத்து ஏற்பட்டது. ஆனால், இன்று நான் உங்கள் முன் நின்று பேசிக்கொண்டிருக்கிறேன் என்றால், அதற்கு காரணமே மதுரை மக்கள்தான். ஒரு சாலை விபத்தில் நான் என்னுடைய நெருங்கிய நண்பர்களை இழந்திருக்கிறேன். அந்த சமயத்தில் மருத்துவர்கள் என்னிடம் சொன்னது, 5 நிமிடம் அல்லது 10 நிமிடம் முன் கொண்டு வந்திருந்தால் காப்பாற்றியிருக்கலாம் என்று.

ஆனால், எனக்கு தெரியவில்லை நான் செய்த புண்ணியமா இல்லை என் பெற்றோர் செய்த புண்ணியமா, அன்று மதுரை மக்கள்தான் என்னை வண்டியில் இருந்து காப்பாற்றி ஆம்புலன்சில் ஏற்றி, மருத்துவமனைக்கு கொண்டு சென்று என் உயிரை காப்பாற்றினார்கள். எனக்கு அவர்கள் யார் என்று கூட தெரியாது. ஆனால், அந்த நபர்கள் அங்கு அன்று இல்லை என்றால் நான் இன்று இங்கு இல்லை” என கூறியிருந்தார் கவின்.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002. and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: anandabhaskarnews@gmail.com